## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.792/2019
Sessions)

( Prosecution P.W.4
Deposition of witness for (Defence
( Court

| Name | கோபி | -- | |
|---|---|---|---|
| Father's Name | குருசாமி | Calling | -- |
| Village | இடையான்குளம் | Religion | இந்து |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 18th day of July 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது இடையான்குளத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு கை, கால்கள் சரியாக இயக்கமுடியாததால் நான் தற்போது வேலை எதுவும் செய்யவில்லை. நான் இதற்கு முன்பு மில் வேலை செய்து வந்தேன். எனக்கு இவ்வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வேண்டுகோளின்பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

எங்களது ஊரை சேர்ந்த சேகர் மகன் மனோஜ்குமார் என்பவர் சுமார் 4 வருடத்திற்கு முன்பு இறந்துபோய்விட்டார். அவர் இருசக்கர வாகன விபத்தில் இறந்துபோய்விட்டார் என்பது எனக்கு தெரியும். போலீஸ் விசாரணையில் நானும் மேற்படி மனோஜ்குமார் என்பவரும் 09.06.2019 ம் தேதி காலை 06.30 மணியளவில் இடையான்குளம் – ராஜபாளையம் ரோட்டில்ராஜா சேதுபதி கடை அருகில் நின்றுக்கொண்டிருந்தோம்என்றும் அப்போது எங்களது ஊரைச்சேர்ந்த கோவிந்தன் என்பவர் அவரது கடை அருகே நடந்து வந்துக்கொண்டிருந்தார்என்றும் TN 84 F 8418 என்ற எண்ணுள்ள டாட்டா ஏசி என்ற வாகனத்தை பின்பு விசாரித்து தெரிந்துக்கொண்ட இவ்வழக்கின் ஆஜர் எதிரியான சிவா என்பவர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மேற்படி கோவிந்தன் மீது மோதிவிட்டார் என்றும் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் நானும் அங்கிருந்தவர்கள்

காயப்பட்டவரை தூக்கி பார்த்தபோது அவரது இடது கால் தொடை வீங்கிவிட்டது என்றும் அவரது இடுப்பில் வலிஇருப்பதாக எங்களிடம் தெரிவித்தார் என்றும் உடனடியாக இங்கு வந்த அவரது மகன் வைரவன் என்பவர் 108 ஆம்புலன்ஸ் மூலம் கோவிந்தனை ஏற்றிக்கொண்டு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்ட சென்றார் என்றும் இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்துள்ளார்கள் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 18th day of July 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**